
உ

சிவமயம்

திருவண்ணாமலை

ஸ்ரீ ஈசான்ய ஞானதேசிகர்

வரலாற்றுக் குறிப்புகள்



வரிப்புலிகள் காவல் செய்ய வீற்றிருந்த

ஸ்ரீ ஈசான்ய ஞானதேசிகர்

(1750-1829)

வெளியீடு

ஈசான்ய மடாலயம்

திருவண்ணாமலை






உ

சிவமயம்

திருவண்ணாமலை

ஸ்ரீ ஈசான்ய ஞானதேசிகர்

வரலாற்றுக் குறிப்புகள்



கருப்பொருள் : P. ஸ்ரீ அவர்கள்

வடிவாக்கம் : நெல்லை கரு. சிங்காரம்

வெளியீடு

ஈசான்ய மடாலயம்

திருவண்ணாமலை

காணிக்கை

வேதநெறி தழைத்தோங்க

சித்தாந்த வழித்தோன்றி

நாதமுனிவராய் நம்மிடை

நாச்சியப்ப ஞானதேசிகர்

போதவித்தகராய் விளங்கி

போதித்துக் காத்து வரும்

சித்தர் கோவிலூர் ஆண்டவர்

பொற்றாளுக்கே சமர்ப்பணம்.

நெல்லை கரு. சிங்காரம்

நெற்குப்பை



கோவிலூர் ஆதீனம் 12ம் பட்டம்
சீர் வளர் சீர்
நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள்
முக்தி 03.10.2011

ஈசானியர் பாடல்

மறைமுடி வதனில் விளங்கிடும் ஒளியே
மான்மழு வரதமோடு அபயம்
கறைமிட றெருமுக் கண்ணும்நாற் புயமும்
கரந்துமா னிடஉருக் கொண்டே
உறைதரும் உண்மை உணர்வினை உணர்த்தி
உயர்புலி ஏவல்கேட் டிருப்பச்
சிறைதவிர் அருணை வாழும்ஈ சான
தேசிகர் திருவடி பணிவோம்.

ஸ்ரீ ஈசான்ய ஞான தேசிகர் வரலாற்றுக் குறிப்புகள்

வேதாந்தம் தழைத்தோங்க ஞானத்தவமிருந்து சாதுக்களையும், மகா வித்வான்களையும் வளர்த்து நாடெங்கும் மடாலயங்கள் உருவாக்கி நல்ல தரும காரியங்கள் செய்து வருகின்ற கோவிலூர் ஆதினத்திற்குட்பட்ட மடாலயங்களில் திருவண்ணாமலை ஈசான்ய மடாலயமும் ஒன்றாகும்.

ஈசான்ய மடாலயத்தில் ஜீவ சமாதி அடைந்து அன்று முதல் இன்று வரை தோன்றாத் துணையாய் வழிபடுவோர் அனைவரையும் வாழ்வித்து வரும் ஈசான்ய ஞான தேசிகர் புகழையும், அருளாட்சியையும் நாடும், நாட்டு மக்களும் நன்கு அறிவர். திருவண்ணாமலையில் வாழ்ந்த ஞானத் தபோவனர்களில் ஆத்மநிஷ்டராய் விளங்கினார். அண்ணாமலையில் ஈசான்ய திசையில் நெடுநாளும் தவயோகியாய் இருந்தமையால் ஈசான்ய ஞான தேசிகர் என்று மக்கள் போற்றிப் புகழ்ந்து கொண்டாடினர். இத் தவமுனிவரின் ஜீவ சமாதியினால் ஈசான்ய மடாலயமும் புகழுடன் விளங்குகின்றது.

புலியுடன் விளையாடும் புனிதம் என்று போற்றிக் கொண்டாடப் பெற்றவர் ஈசான்ய ஞான தேசிகர். இவர் தம் வரலாறு மக்களின் உள்ளத்தில், கலந்திட வேண்டும் என்று இந்நூலினை வழங்குகின்றோம்.

நினைத்தாலே முக்தி தரும் அண்ணாமலையில் ஈசான்யத்தில் தவமுனிவராய், அருள் உருவாய் ஞானச் சுடராய் அடியவர்கட்கு அருள் வழங்கும் தவமுனியாய், புலியுடன் விளையாடிய புனிதராய் விளங்கும் ஈசான்ய ஞானதேசிகர் சுமார் 270 ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்தவர்.

ஞானச்சுடராய் விளங்கிய ஈசான்ய ஞான தேசிகரின் பூர்வீகம் ராயவேலூர். இவர் தம் தந்தையரர் திருநீல கண்டர். வேளாள மரபில் சமயச் செல்வராய் வாழ்ந்து வந்த திருநீலகண்டர் தமது குலம் விளங்க வழித்தோன்றல் இல்லாதிருந்து வருந்தினார். அண்ணாமலையாரை வேண்டி நாளும் தவமிருந்தார். வேண்டுவார் வேண்டிய வண்ணம் வழங்கும் அண்ணாமலையார் அருளால் நீலகண்டருக்குக் குழந்தைப்பேறு கிடைத்தது. குலம் விளங்க வந்த குலவிளக்கிற்கு கந்தப்பன் என திருநாமம் சூட்டி மனம் மகிழ்ந்தனர் பெற்றோர்.

விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பதற்கு ஒப்ப கந்தப்பர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கி வயதிற்கு மிஞ்சிய சில முற்குறிகள் வெளியிடலானார். பள்ளியில் ஆசிரியர் நடத்தும், கற்பிக்கும் முன்னமையே பாடங்களை திறம்படக் கூறலாயினர். ஓதாது உணரும் மேதையாகத் தோன்றிய கந்தப்பர் நிஷ்டை கூடி வந்தது கண்டு மகிழ்ந்தனர். துள்ளித் திரியும் பள்ளிப்பருவமதில் விளையாட்டில் நாட்டம் கொள்ளாது கந்தப்பர் அதிசயத் தக்க திருவிளையாடல்கள் பல புரிந்தார். தம்மைத் தாமே பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டி சில நாள் யாரும் காணாவண்ணம் மறைந்திருந்து பள்ளி திரும்பி வருவார்.

கந்தப்பரின் அறிவுத்திறன் கண்ட திருநீலகண்டர் மனம் மகிழ்ந்து தம்குல மரபுப்படி வேளாள குலத்திற் குரிய முறைப்படி கந்தப்பரின் 7ஆம் வயதில் சிவதீட்சை செய்வித்துத் தேசிகர் என்ற பட்டத்தையும் சூட்டி மகிழ்ந்தார். கந்தப்பரும் தமது 16ஆவது வயது வரை சிவபூஜை முறைகளைச் சிறிதும் வழுவாது கடைப்பிடித்து ஒழுகி வந்தார். பூஜை வழிபாடும் தியானமும் கந்தப்பரை ஞானப்பழமாக மாற்றி வந்ததைப் பெற்றோர் அறிந்திலர்.

காலத்தே பயிர் செய் என்பதற்கு ஏற்ப கந்தப்பருக்குத் திருமணம் செய்து வைக்க நினைத்து பெண்தேடும் முயற்சியில் ஈடுபடலாயினர். ஒரு நாள் தந்தையார்

பெண் தேட புறப்பட்டுச் சென்றார். நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும் கந்தப்பருக்கோ திருமணத்தில் நாட்டம் இல்லை. தியானத்தில் திளைத்து பேரானந்த பெருவெள்ளத்தைக் காண நாட்டம் கொண்டார்.

தந்தை மணமகள் தேடிச் செல்ல, மைந்தன் அன்னையாரை நாடி நான் சம்சாரி ஆக மாட்டேன். சம்சாரசாகர சுழலைக் கடந்து நம்மை எல்லாம் ஆட் கொண்ட ஆண்டவன் எழுந்தருளியுள்ள திருத்தலங்களைக் கண்டு தரிசித்து வருகின்றேன் என்று கூறி அன்னையாரின் ஆசி பெற்று தீர்த்தயாத்திரை புறப்பட்டுச் சென்று விட்டார். தீர்த்தஸ்தலங்களில் சிறந்து விளங்கும் தில்லை யம்பதியை அடைந்தார்.

உள்ளது உணராதவர் உறவைத் தள்ள வேண்டும். நல்லதை நாலு கொடுத்தேனும் பெற வேண்டும். ஞான குருவின் நல்லுறவை நாட வேண்டும் என்ற நல்லுணர்வு நாளும் கந்தப்பரின் உள்ளத்தில் வளரத் தொடங்கியது. நமது ஈன உடல் ஞான உடம்பாக மாறும் வழி எது எனத் தேடத் தொடங்கினார். நாள்தோறும் சிவத்தலங் களுக்குச் சென்று வழிபடலாயினர். தில்லையம்பதி நடராஜப் பெருமானின் தரிசனத்துடன் தில்லையில் கந்தப்பருக்குக் குருதரிசனமும் கிடைத்தது.

கற்பனை கடந்த ஜோதி நடராஜப் பெருமானுக்குத் தினசரி அகண்ட தீபக்கட்டளை ஏற்படுத்தி, தில்லைவாழ் அந்தணர்களால் செப்புப்பட்டயம் வழங்கப்பெற்று அருள் வடிவாக, ஞானச்சுடராக விளங்கிய ஸ்ரீ மௌன குரு சுவாமிகள், நகருக்குத் தென் பகுதியில் ஆயிகுளத்தின் வடகரையில் தியான நிலையில் அருள் உருக் கொண்டிருந்தார்கள்.

எல்லை கடந்த பெருமானைக் காண வேண்டி தில்லை வந்த கந்தப்பரும் ஸ்ரீ மௌன குரு சுவாமிகளிடம் உபதேசம் பெற வேண்டும் என்று எண்ணம் கொண்டார்.

தில்லையிலேயே நாளும் பிச்சை ஆகாரம் கொண்டு காலை மாலை இரு வேளைகளிலும் ஸ்ரீ மௌன குரு சுவாமிகளைத் தரிசித்து வந்தார். சுவாமிகள் கந்தப்பருக்குப் பாடம் புகட்டவில்லை. இதனைக் கண்ட கந்தப்பர் நாம் இன்னும் பக்குவ நிலைமை அடையவில்லை என எண்ணி வருந்தினார். வருத்தம் விரக்தியாய் மாறியது. கந்தப்பர் தாம் அணிந்திருந்த ஆடைகளைக் களைந்தார். கௌபீனதாரியாகச் சுவாமிகளைக் காணச் சென்றார்.

மார்கழி மாதம், பனியும் குளிரும் அதிகம். உடலை வாட்டும் குளிரைக் கொஞ்சமும் பொருட்படுத்தாது, குருவின் அருளை வேண்டி நாளும் தவம் இருந்தார். ஒரு நாள் மழை அதிகம் பெய்த போதும், நனைந்து கொண்டே உடல் நடுக்கம் இன்றி வந்து வணங்கிய தேசிகரைக் கண்குளிர நோக்கினார் ஸ்ரீ மௌனகுரு சுவாமிகள். மனம் மகிழ்ந்த ஸ்ரீ மௌன குரு சுவாமிகள் அன்று யாரோ தமக்குப் போர்த்திய சால்வையைத் தேசிகருக்கு போர்த்தி விட்டார்கள். உடன் உணர வேண்டிய உண்மை நிலையையும் உபதேசித்தார்கள். அப்பொழுதே அங்கேயே தியானத்தில் அமரச் செய்து ஆசி வழங்கினார்கள். உண்மை ஒளி வீசி அருளமுதம் தந்து காத்திட வேண்டும் என்ற தேசிகரின் வேண்டுகோளை ஏற்று ஸ்ரீ மௌன குரு சுவாமிகள் தேசிகருக்கு ஞானமுத்திரை பிடித்து உண்மை உணர்த்தினார்கள். அன்றே வேதாந்த சித்தாந்த சமரச சன்மார்க்கம் உணர்த்தி விட்டார்கள். மார்க்க நெறி போதித்த ஸ்ரீ மௌன குரு சுவாமிகளைத் தில்லை நடராஜராகவே எண்ணி வழிபட்டார். குருபக்தி மேலீட்டால் தேசிகர் மௌனகுரு சுவாமிகள் மீது பஞ்ச ரத்தினம் என்னும் பாமாலை பாடினார். சஞ்சல மனத்தையும் வஞ்சக புலன்களையும் அழித்து தஞ்சமென குரு அருளை நாடி நின்றார். சித்தமது தெளிய ஒரு வித்தை குருவருளால் கிடைத்தது கண்டு உள்ளம் மகிழ்ந்தார். சித்தர்களுக்குரிய யோகத் தண்டு, யோகப்பட்டை முதலியன கொண்டு ஜடாமுடி தரித்து

ஸ்ரீ மௌனகுரு சுவாமிகளிடம் விடைபெற்று புறப்பட்டார் கந்தப்ப தேசிகர்.

தில்லையம்பதி விட்டுப் புறப்பட்ட தேசிகர் திருவாரூர் சென்று தியாகராஜ சுவாமிகளைத் தரிசித்துப் பின் மடப்புரம் குரு தெட்சணாமூர்த்தி சுவாமிகளுடன் சில காலம் வாழ்ந்திருந்தார்கள். திருநாகைகாரோணம் அருகில் சிக்கல் பெருநகரை அடுத்த பொருள் வைத்த சேரியில் ஸ்ரீ உகந்தலிங்க ஞான தேசிகர் தவ முனிவராய் வீற்றிருந்து பல சீடர்களுக்கு ஞான உபதேசம் செய்வித்தலைக் கேள்விப்பட்ட கந்தப்ப தேசிகர் அவர் தம் பாதங்களை வணங்கி அங்கு தங்கி அம்மகானிடம் பாடம் கேட்டு வேதாந்த உண்மைகளை உணர்ந்தார். நித்திய அமைதி வேண்டி நிர்விகல்ப சமாதி கூட வேண்டும் என்று மனித நடமாட்டம் இல்லாத இடமாகச் செல்ல விரும்பி ஸ்ரீ உகந்தலிங்க சுவாமிகளிடம் விடை பெற்று வட திசை நோக்கிச் சென்றார்.

திருவண்ணாமலைக்கு அடுத்த வேட்டவலத்துப் பக்கத்தில் பாக்கத்து மலையில் ஒரு குகையில் தங்கி தவம் புரியத் தொடங்கினார். மகான் ஒருவர் மறை விடத்தில் தவம் செய்வதைக் கண்ணுற்ற முத்துசாமி உடையார் என்பவர் தாம் மேய்த்து வரும் மாடுகளில் பால் கறந்து நாள்தோறும் தேசிகருக்குக் கொடுத்து வந்தார். சித்தபுருஷருக்குச் செய்யும் தொண்டு என்றும் வீண்போவது இல்லை. உடையார் வீடு கட்டும் பணியைத் தொடங்கிய காலத்தில் புதை பொருளாய் பூமியின் அடியில் பெரும் பொருள் கிடைத்தது. உடையாரும் பெரும் செல்வம் உடையவர் ஆனார்.

உடையாரின் வளர்ச்சி கண்டு ஊரார் பொறாமைப் பட்டனர். தேசிகரின் அருளால் உடையார் பெரும் செல்வந்தர் ஆனார் என்பதை அறிந்து, பேராசையினால் ஊரார் தேசிகரின் இருப்பிடம் சென்று உடையாருக்குப் போன்று எங்களுக்கும் செல்வம் கிடைக்க வேண்டும்

அதற்கு அருள் புரியுங்கள் என்று நாளும் வேண்டினர். ஊராரின் தொல்லை தாங்காது தேசிகர் யாவரும் அறியாவண்ணம் அவ்விடம் விட்டுப் புறப்பட்டார். பின்னர் அண்ணாமலை யில் கோரக்க நாதர் குளக்கரையில் நிஷ்டை கூடி தவமிருந்தார். அங்கு மாடு மேய்ப்பவர்கள் தேசிகருக்குப் பால் முதலிய பொருள்களை வழங்கி னார்கள். தேசிகரும் மனமுவந்து பெற்றுக் கொண்டார்.

அருணை வாழ் அருணாசலம் செட்டியாருக்குச் குழந்தைப்பேறு இல்லை. மனம் வருந்திய செட்டியார் கோரக்கநாதர் குளக்கரை சென்று தேசிகரை வணங்கி நின்றார். தொண்டுகள் புரிந்தார். தேசிகர் அருளால் அருணாசலம் செட்டியார் வீட்டில் தொட்டில் ஆடத் தொடங்கியது. வேலாயுதம் என்று பெயரிட்டார். அவர் தம் புதல்வர் முருகப்பர் பின்னர் தோன்றினார். முருகப்ப ரும் தம் பாட்டனாருக்குத் தேசிகர் கொடுத்த திருநீற்றுப் பையை வழிபட்டு வந்தார். அதனால் நல்ல பலன் கிடைத்ததாகக் கூறுவர். அவர்கள் பரம்பரை இன்று வரை யும் அந்த திருநீற்றுப் பையை வழிபட்டு வருகின்றனர். அதனால் தங்கட்கு எல்லா நன்மைகளும் கிடைத்து வருகிறது என்று கூறுகின்றனர்.

பக்கத்துமலை விட்டு தேசிகர் புறப்பட்டு வந்த செய்தி உடையாருக்குத் தெரியாது. தேசிகரைக் காணாது உடையார் உள்ளம் வருந்தினார். எங்கு தேடியும் தேசிகர் கிடைக்காது வருந்தி நின்ற உடையார் கனவில் யாம் திருவண்ணாமலையில் ஈசான்ய திசையில் இருக் கின்றோம். அங்கு வருக என்று அண்ணாமலையார் உருவில் அசரீரி மொழிந்தது. அதே போன்று தேசிக ரிடத்தும் உம்மைக் காண நாம் பக்தர்களை ஈசான்ய திசைக்கு வரச் செய்துள்ளோம். நீவிரும் அங்கு செல்க என்று கூறியது அண்ணாமலையாரின் கருணை வெள்ளத்தை நினைந்து தேசிகர் அண்ணாமலைார் மீது தோத்திரப் பாமாலை பாடினார்கள்.

இறைவன் இட்ட கட்டளைப்படி ஈசான்ய திசை நோக்கிச் சென்று மாமரங்களும், செடிகளும், கூரைப்புதர் களும் நிறைந்த ஈசான்ய குளத்தின் தென்கரையில் ஒரு பெரிய ஆலமரத்தின் கீழ் சிவயோக சீடராய்ச் சமாதி நிலையில் அமர்ந்து தவமியற்றினார்.

மழையது காணாது வாடிய பயிர் போன்று தேசிகர் தரிசனம் இல்லாது மனம் வாடிய முத்துசாமி உடையார் அண்ணாமலையாரின் அசரிரி வாக்கின்படி தேசிகரைக் காணப் புறப்பட்டார். பெரியோரைக் காண வெறும் கையுடன் செல்வது நன்றன்று என்பதனை ஏற்றுக்கொண்டு தேசிகரைக் காண ஈசான்ய திசை நோக்கிப் புறப்பட்டார். தேசிகர் தரிசனம் பெற்று அடங்காத மகிழ்ச்சியில் அடியவர்கட்கு அமுது அளித்தார். தேசிகரை விட்டுப் பிரிய மனம் இல்லாது பிரியாவிடை பெற்றுச் சென்ற உடையார் இடை இடையே வந்து தேசிகரைத் தரிசித்துச் செல்லலாயினார்.

தேசிகர் நீண்ட ஜடா முடியுடன் அறுபது வயதைக் கடந்த ஞானப்பழமாக எப்பொழுதும் அண்ணா மலையாரை நினைத்து ஞானத்தவம் புரிந்து வந்தார். தேசிகரின் தவத்திற்கு இடையுறு ஏதும் வராவண்ணம் புலிகள் காவல் காத்திருக்கும். தேசிகர் நிஷ்டை கலைந்து அண்ணாமலையாரே புலி உருக்கொண்டு நம்மைக் காத்து வருகிறார் என்று நினைத்து புலிகளை அண்ணா மலை அரசே என்று தடவிக் கொடுத்து மனம் மகிழ்வார்.

வனத்தில் தவமியற்றும் தேசிகரைக் காண அடியவர்கள் கூட்டம் நாளுக்கு நாள் பெருகியது. புலிகள் இருப்பதைக் கண்டு அன்பர்கள் மனம் அஞ்சுவதைக் கண்ட தேசிகர் மக்கள் எமைக்காண வரும் சமயம் சற்றே விலகி இருங்கள் அண்ணாமலையாரே என்று புலிகளைக் கேட்டுக்கொள்வார். புலிகளும் புனிதன் தரிசனத்திற்கு இடையூறு கூடாது என்று மறைவிடம் சென்று மக்கள் கூட்டம் சென்றதும் மீண்டும் தேசிகர் அருகில் வந்து

காவல் புரிந்தன. கரடி, வெம்புலி வாயையும் கட்டலாம் என்பது பொய்யாகுமா? காட்டுப்புலிகளைத் தம் வசமாக்கிய தேசிகர் நாட்டு மக்களைத் தம்பால் ஈர்த்து மக்கட் தொண்டே மகேஸ்வரன் தொண்டு என்ற உயரிய நோக்கில் அன்பர்கட்கு உபதேசத்தாலும், தொண்டாலும் துன்பம் போக்கியது அதிசயமன்று. இந்நாளில் தேசிகரின் பெருமை உணர்ந்த புதுப்பாளையம் நாயக்கர் தமக்குற்ற சூளை நோய் நீங்க அண்ணாமலையாரை வலம் வந்து தேசிகரின் ஆசி பெற்று சூளை நீங்கி வாழலானார்.

ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலம், அருணாசலம் முதல் விருத்தாச்சலம் வரை மாவட்ட ஆட்சித் தலைவராக ஐடன் துரை என்பவர் இருந்து வந்தார். அதிகார பலம் பெற்ற ஐடன் துரையைக் கொடிய காசநோய் வாட்டியது. மருத்துவம் பல பெற்றும் நோய் நீங்கிற்று இல்லை. தேசிகரின் தரிசனம் பெற்றுக் குணமடைந்த ஐடன் துரை தேசிகரை மனதாரக் கொண்டாடி மகிழ்ந்தார்.

ஐடன் துரை தேசிகரை வணங்கி தேவரீர் ஆணை யிட்டால் எவ்வளவு நிலபுலன்கள் வேண்டுமானாலும் தானசாசனம் செய்து வைக்கிறேன் என்று வேண்டினார். அதுசமயம் தேசிகர் மகிழ்ச்சியுற்று அதோ இரண்டு குழந்தைகளுடன் பெரிய குடும்பஸ்தன் இருக்கின்றார். அவருக்கு வேண்டியன எழுதி வையுங்கள். அது தான் நல்லது. நான் பரதேசி எனக்குச் செய்வது தகாது என்று அண்ணாமலையாரை நோக்கிக் காட்டினார். அதன்படி ஐடன் துரை அண்ணாமலையாருக்கு நிறைய நிலபுலன்கள் தான சாசனம் செய்து வைத்தார்.

அண்ணாமலையில் தேரோட்டத் திருவிழா பெரு விழாவாகக் கொண்டாடப்பெறும். அதனை மாவட்ட ஆட்சித்தலைவர் முன் நின்று நடத்துவது வழக்கம். ஒரு நாள் ஐடன் துரை தேர்த்திருவிழா துவக்கத்திற்கு அண்ணாமலை நோக்கி குதிரையில் வரும் சமயம் பெரும் மழையினால் பெண்ணை நதி இருகரை தொட்டு,

கடலென ஓடியது. வெள்ளத்தினைக் கண்ட ஐடன் துரை தேசிகரை மனதில் துதித்து நாம் தேசிகரைத் தரிசிக்க வேண்டும் தேரினை ஓட்ட வேண்டும் எல்லாம் எம் தேசிகர் அருள் என்று மனதாரத் துதித்து குதிரையை ஆற்றின் வெள்ளம் நோக்கி நடத்தினார். குதிரை செல்லச் செல்ல வெள்ளம் நூல் போல் விலகி வழிவிட ஐடன் துரை அண்ணாமலை வந்தடைந்தார்.

ஐடன் துரையின் வேண்டுதல் தேசிகரின் ஞானப் பார்வைக்கு எட்டவே தேசிகர் தாம் இருந்த இடத்தில் இருந்தபடியே தென்புறமாகக் கையை நீட்டி இடதுபக்கம் தாழ்த்தினார். நாகை இராமலிங்க சுவாமிகள் தேசிகரின் அருகில் அமர்ந்திருந்தார்.

தேசிகரின் இச்செயலுக்கு விளக்கம் கேட்க நினைத்தார். அதனைக் குறிப்பால் உணர்ந்த தேசிகர் யார் ஒருவர் ஆற்றில் விழுந்தாலும் யாம் பொறுப்பு அதனை நீக்கவே என்று கூறினார். அண்ணாமலை வந்தடைந்த ஐடன்துரை நேரே தேசிகரைத் தரிசித்து தேவரீரின் அருளால் அடியேன் வெள்ளத்தினைக் கடந்து வந்தேன் என்று வணங்கி மனம் மகிழ்ந்தார்.

தேசிகரின் புகழ் பெருகப் பெருக மக்களின் கூட்டம் அதிகம் வரத்தொடங்கியது. தேசிகர் பக்குவம் பெற்ற பக்தர்களுக்கு ஞானக்கட்டளை என்ற நூலை இயற்றி அதனைப் பாடமாக நடத்தினார். பக்தர்கள் பயமின்றித் தங்குவதற்கு அண்ணாமலைவாழ் மக்கள் தேசிகர் தவ மியற்றிய ஈசான்ய குளக்கரையில் பர்ணசாலை அமைத்துக் கொடுத்தனர். அதுவே இன்று ஈசான்ய மடாலயமாக வளர்ந்து சமயத்தொண்டு செய்து வருகின்றது.

கோவிலூர் ஆதீனத்தைச் சார்ந்த முத்துராமலிங்க ஞான தேசிகர் ஈசான்ய ஞான தேசிகரைத் தரிசித்துச் செல்ல அண்ணாமலை வந்தடைந்தார். முத்துராமலிங்க ஞான தேசிகர் காரைக்குடி கோவிலூரார் பரம்பரையைச் சேர்ந்தவர். நாகையில் வாழ்ந்த காலத்து வேதாந்த

பாடங்களைப் பயில்வதற்காகச் சிக்கல்- உகந்தலிங்க தேசிகர் சுவாமிகளிடம் சென்று பாடம் கேட்டு வந்தார். அக்காலத்து உகந்தலிங்க சுவாமிகள் மூலம் ஈசான்ய தேசிகர் அருள் வலிமை அறிந்து ஈசான்ய தேசிக சுவாமிகளைக் கண்டு தரிசிக்க அண்ணாமலை வந்தார்கள். அது சமயம் ஈசான்ய தேசிகர் ஆணைப்படி பணி செய்து வந்தார் முத்துசாமி உடையார். உடையார் உண்மைத் தொண்டர். முத்துராமலிங்க ஞான தேசிக சுவாமிகளின் கை விரல்களில் பளிச்சென மோதிரம் அழகான பிரகாசம் உடையது என்றார். இதனைக்கேட்ட முத்துராமலிங்க ஞான தேசிக சுவாமிகள் உடனே மோதிரத்தைக் கழற்றி உடையாரிடம் கொடுத்து விட்டார்கள். இதனைக் கண்ணுற்ற ஈசான்ய தேசிக சுவாமிகள் முத்துராமலிங்க சுவாமிகளின் பற்றற்ற நிலையைப் பாராட்டினார்கள். அன்று முதல் சில நாள் தங்கிப் பின்னர் பிரியாவிடை பெற்றுச் சென்றார்கள்.

திருவண்ணாமலையின் அருகே உள்ளது குளத்தூர். அங்கு துறவறம் பூண்டு தெய்வத் தொண்டு செய்து எளிமையாக வாழ்ந்தனர் சபாபதி சுவாமிகள். அவர்கள் காஞ்சி காமாட்சி அம்மையை நாளும் வழிபட்டமையால் காஞ்சி காமாட்சி அம்மையின் அருள்பெற்று வாக்கு வல்லமை உடையவராகத் திகழ்ந்தனர். அண்ணாமலையில் அருள்புரிந்து வரும் ஈசான்ய தேசிகரின் தொண்டனாக, பக்தனாக விரும்பி தேசிகரை நாடிச் சென்று வணங்கி பல காலம் அங்கு தொண்டாற்றி வந்தார்கள். சபாபதி சுவாமிகளின் அடக்கமும் ஆன்மீகப்பற்றும் கண்ட தேசிகர் சபாபதி சுவாமிகளை அழைத்து ஆன்ம உபதேசம் செய்து அவரைத் தியானத்தில் அமரச் செய்தார்கள். சபாபதி சுவாமிகளுக்கு நிஷ்டை கைவந்த பாடு இல்லை. சபாபதி சுவாமிகள் தமிழிலும், வட மொழியிலும், நல்ல பாண்டித்தியம் பெற்று வல்லுனராகத் திகழ்ந்தார்கள். இதனை அறிந்த தேசிக சுவாமிகள் சபாபதி சுவாமிகளை அழைத்து தாங்கள் வித்யாதானம் செய்தால் பிறவிப்

பந்தம் நீங்கி இறைவனின் அருளால் நிஷ்டை கைகூடி வரும் என்று கூறினார்கள்.

சபாபதி சுவாமிகளும் அண்ணாமலையாரையும் தேசிகரையும் மனதாரத் துதித்து வித்தியாதானம் செய்து நிஷ்டை கூடி இருந்தார்கள்.

சபாபதி சுவாமிகள் பின்னர் கலசப்பாக்கம் அருகில் உள்ள மேட்டுப்பாளையம் சென்று ஆற்றங்கரையில் தங்கி பக்தர்களுக்கு வேதாந்த பாடங்களை ஓதுவித்து வாழ்ந்தனர். அக்காலத்தில் அங்கு பல அற்புதங்களை நிகழ்த்திக் காட்டினார்கள். சபாபதி சுவாமிகளின் அருள் வலிமை, தவ வலிமை, வேதாந்தப் புலமை முதலியன கேள்வியுற்ற மக்கள் அவர்களிடத்தும் அன்பும் பாசமும் கொண்டு அவர்கள் இட்ட கட்டளையை நிறைவேற்றி வந்தனர். மேட்டுப்பாளையம் மடாலயமும், திருக் கோயிலும் கட்டி நித்திய வழிபாடும் பூஜைகளும் இன்று வரை நடந்து வருகின்றன. மேட்டுப்பாளையம் சபாபதி சுவாமிகள் மடம் இன்றும் ஈசான்ய மடத்தினைச் சார்ந்துள்ளது.

கோரக்கநாதர் குளக்கரையில் ஈசான்ய ஞான தேசிக சுவாமிகள் தங்கி தவமிருந்த காலத்து அவர்கட்கு அண்ணாமலையார் தரிசனம் கொடுத்து அருள் பாலித்தார், அதனால் அகமகிழ்ந்த சுவாமிகள் அண்ணாமலையாரின் மீது தோத்திரப் பாமாலை, அண்ணாமலை வெண்பா, அண்ணாமலையார் அந்தாதி, அண்ணாமலையரர் கன்னி முதலிய பாடல்களை இயற்றினார்கள். தம்மை நாடி பாடம் கேட்ட சீடர்களுக்கு தேசிகர் அண்ணாமலையார் பாடல்களைப் பயிற்றுவித்து வந்தார்கள். ஒரு நாள் சீடர்கள் சூழ பாடம் நடத்திக் கொண்டிருக்கும் காலத்து தேசிகரின் ஞான திருஷ்டியில் ஸ்ரீ உகந்தலிங்க தேசிக சுவாமிகளின் விவேக காலம் தொடங்கிவிட்டது என்பதை உணர்ந்தார்கள். ஞானிகளும் ஆத்ம நண்பர்களின் சினேகத்தை, அன்பை, பாசத்தைக் கடப்பதில்லை.

இதற்கு தேசிகரும் விதிவிலக்கன்று, தனது மனத்திரையில் ஸ்ரீ உகந்தலிங்க தேசிக சுவாமிகளைக் காண ஆவல் கொண்டு அன்றே தமது சீடர்கள் உடன் வர பொருள் வைத்த சேரிக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். இதே போன்று ஸ்ரீ உகந்தலிங்க சுவாமிகளுக்கும் ஈசான்ய ஞான தேசிகர் பொருள் வைத்தசேரி நோக்கி வருவது நிஷ்டையில் தெரிந்து மனம் மகிழ்ந்தார்கள். ஈசான்ய ஞான தேசிகரும் பொருள்வைத்த சேரி சென்று தனது ஆசான் ஸ்ரீ உகந்தலிங்க ஞான தேசிகரைச் சந்தித்தார். அவர் வரவை எதிர்பார்த்திருந்த ஸ்ரீ உகந்தலிங்க தேசிக சுவாமிகளும் மகிழ்வுடன் விவேக கைவல்யம் அடைந்தார்கள்.

ஸ்ரீ உகந்தலிங்க சுவாமிகளின் விவேக கைவல்ய நிகழ்ச்சியில் கலந்து பின்னர் திருவண்ணாமலை திரும்பிய தேசிகரும் வழக்கம் போன்று தமது சீடர்களுக்கு வேதாந்த பாடங்களைப் பயிற்றுவித்தும், மக்களின் துன்பங்களையும், துயரங்களையும் நீக்கி அருளும் அன்புத் திருவிளையாடல்களில் ஈடுபட்டும் வந்தார்கள். சீடர்களுடன் சேர்ந்து மக்கட் பணி செய்து வரும் காலத்து தமது விவேக கைவல்ய காலத்தை முன்கூட்டியே தெரிந்து கொண்டார்கள். ஆண்டவன் இட்ட கட்டளையை அகமகிழ்வுடன் ஏற்று சீடர்களும் அறியும் வண்ணம் தமது விவேக கைவல்ய காலத்தையும், தாம் பரிபூரண மாகும் காலத்தையும் ஓர் ஓலை நறுக்கில் எழுதி தமது ஆசனத்தின் கீழ் வைத்து விட்டார்கள். குறித்த நாளில் ஸ்ரீ தேசிகர் தமது சீடர்களை அழைத்து ஸ்ரீ நடராஜப் பெருமான் அறைக்கட்டுக்குச் செல்கிறார்கள். நாமும் அங்கு செல்ல வேண்டும் என்று முக மலர்ச்சியுடன் கூறினார்கள். அதன் பின் ஸ்ரீ சுவாமிகள் பத்மாசனத்திலிருந்து உத்தரமுகமாய சின்முத்திரை தரித்து சிறிது அலர்ந்த நோக்கமாய் சமாதிகூடி அகண்ட சச்சிதானந்த நிலை அடையும்போது சீடர்களில் முதன்மையானவராகத் திகழ்ந்த முத்துசாமி உடையார் சுவாமி அடியேன்களுக்குக்

கதியாதோ என்று கேட்டு நின்றார். அதற்குத் தேசிக சுவாமிகள் உமது குடும்பம் முன்னமையே கொத்தோடு பழுத்துப் போயிற்றே என திருவாய் மலர்ந்தருளி பரிபூரண பக்குவம் அடைந்தார்கள்.

ஸ்ரீ ஈசான்ய ஞான தேசிக சுவாமிகளின் பரிபூரண பக்குவ காலம் கலியுகம் 4930. சுரியான சாலிவாகன சகாப்தம் 1751 (கி.பி.1829) விரோதி வருடம் மார்கழி மாதம் 26-ம் தேதி குருவாரம் மிருகசீரிட நட்சத்திரம் கூடிய நன்னாளாகும்.

ஸ்ரீ ஈசான்ய ஞான தேசிக சுவாமிகள் ஈசான்ய குளக் கரையில் வாழ்ந்த காலத்து தாம் தங்கி இருந்த ஆசிரமத்தின் பக்கத்தில் உள்ள வில்வ மரத்தடிக்குச் சென்று அண்ணாமலையாரை இருகரம் கூப்பி வணங்கி வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். நாளும் கவனித்து வந்த மெய்யன்பர்கள் சுவாமிகளின் திருமேனி சமாதிகொள்ள வேண்டிய இடம் அந்த வில்வமரத்தடியில் தான் என்று முடிவுசெய்து சுவாமிகளின் திருமேனியை வில்வ மரத்தடியில் சமாதி வைத்தனர். சுவாமிகள் சமாதி கொண்ட இடம் இன்று ஈசான்ய ஞான தேசிக சுவாமி களின் ஜீவ சமாதி என மக்களால் வழிபட்டு வரப்படு கின்றது. சுவாமிகளின் சமாதிக்குத் தினந்தோறும் காலை, பகல், இரவு பூஜை வழிபாடுகள் நடந்து வருகின்றன. ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து வழிபட்டுச் செல் கின்றனர். வேண்டுவார் வேண்டிய வண்ணம் வழங்கும் வள்ளல் பெருமானாக ஈசான்ய சுவாமிகள் விளங்குகின்றார்கள்.

தேசிகருடன் ஒன்றாக வாழ்ந்த ஸ்ரீ உகந்தலிங்க சுவாமிகள் தேசிகருக்கு முன்பே பரிபூரணமாயினார்கள். கோவிலூர் ஸ்ரீ முத்து ராமலிங்க ஞான தேசிக சுவாமிகள் தேசிகருக்குப் பிற்காலம் பரிபூரணம் பெற்றார்கள்.

தேசிகரின் பரிபூரணத்திற்குப் பின்னர் கோவிலூர் முத்துராமலிங்க ஞான தேசிக சுவாமிகள் தமது

திருவுள்ளம் கொண்டு ஈசான்ய ஞான தேசிக சுவாமிகளின் சமாதியை வழிபட்டு வர வேண்டும் என்று ஈசான்ய மடாலயம் தோன்ற ஆவன செய்தார்கள்.

நம்பினோர் கெடுவதில்லை இது நான்கு மறை தீர்ப்பு. அது போன்று நம்பிக்கையுடன் நாளும் மனம், மொழி, மெய்சுத்தியாக ஈசான்ய ஞான தேசிக சுவாமிகளை வழிபட்டு வருபவர்கெல்லாம் ஈசான்யரின் அருள் வாக்கு எல்லா நன்மைகளும் நாளும் வழங்கி அவர் தம் வாழ்வில் ஒளி விளங்கச் செய்வதில் சிறிதும் ஐயமில்லை.

மனித மனத்தளவிற்கு எட்டாத, புலப்படாத, ஞானப் பிழம்பாக அருள்சுடராக வாழ்ந்த ஞானப் பெருமக்களின் அரிய சரித்திரம், போதனை மொழிகள், அவர்கள் நடத்திக் காட்டிய அரும்பெரும் செயல்கள் மக்கட்குப் பெரிதும் வழிகாட்டியாக இன்றளவும் இருந்து வருகின்றன.

மக்களின் வாழ்வில் அன்பும், ஆன்மீகமும் வளரத் துறவிகள் நாளும் தொண்டாற்ற வேண்டும். இதனை நன்குணர்ந்த சாதுக்கள் ஈசான்ய மடாலயத்தில் அன்று முதல் இன்று வரை தங்கியுள்ளார்கள்.

ஈசான்ய மடாலயத்தில் சுமார் 150 வருடங்களாகச் சாதுக்கள் தங்கி மக்கட்கு வழிகாட்டியாகத் திகழ்கின்றனர். ஈசான்ய மடத்தின் குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ இராம நாத ஞான தேசிகர் சுவாமிகள் தமது கருணை உள்ளத்தால் இளம் சிறார்களும் நன்றாக ஞான அறிவு பெற்று வளர வேண்டும் என்ற கருணை உள்ளத்துடன் 1965ல் சேவாசிரமம் கண்டார்கள். அன்று முதல் இன்று வரை ஈசான்ய மடாலயத்தில் மாணவர்கள் தங்கி உலக அறிவுடன் ஞான அறிவும் பெற்று வருகின்றார்கள்.

தவமுனிவர்கள் எண்ணுவது எல்லாம் உயர் எண்ணம் தான். இதனைக் கோவிலூர் ஆதீனகர்த்தர் தவத்திரு நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள் நமக்குச் செயல்

வடிவமாகக் காண்பித்துள்ளார். நாட்டில் வேதாந்தம், திருமுறைகள், தெய்வ வழிபாடு சிற்பக்கலைகள், இசைக்கலைகள் நாளுக்கு நாள் மக்களின் மனதைவிட்டு வாழ்க்கையை விட்டு மங்கி மறைந்து வருவதைக் கண்ட சுவாமிகள் அவைகளுக்கு மக்களிடத்து ஒரு ஈடுபாடும் பக்தியும் வர வேண்டும் வளர வேண்டும் என்று அவைகளை வளர்க்க ஆவன செய்துள்ளார்கள்.

1995ம் ஆண்டு முதல் நாதஸ்வரம், தவில், திருமுறை, வேதாகமம் ஆகிய பாரம்பரியக் கலைகளுக்கு இலவச வகுப்புக்களும், பொருள் உதவியும் செய்து வருகிறது கோவிலூர் மடம்.

தற்போது

" கோவிலூர் ஆண்டவர் உடற்பயிற்சிக் கல்லூரி

" நாச்சியப்ப சுவாமிகள் பாலிடெக்னிக் கல்லூரி

" கோவிலூர் ஆண்டவர் மெட்ரிகுலேசன் பள்ளி

" நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரி

" நாதஸ்வரம், தவில் கல்லூரி


" நாச்சியப்ப சுவாமிகள் திருமுறை கல்லூரி

ஆகியவை சிறப்பாக நடைபெற்று வருகின்றன.



கோவிலூர் ஆதீனம் 14ம் பட்டம்
சீர் வளர் சீர்

நாராயண ஞானதேசிக சுவாமிகள்



ஈசானியர்

ஞானத் தபோனவரை வாவென்று அழைக்கும் மலையாகிய அண்ணாமலை திருத்தலத்தில் ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெரும் ஜோதியாக விளங்கும் அண்ணாமலை பெருமானின் ஆவிர்பாவமாய் திகழ்ந்து அருள் திருவிளையாடல் பல புரிந்து அருவுருவத் திருமேனியாம் லிங்காகரமாய் விளங்குகின்ற "ஸ்ரீ ஈசான்ய ஞான தேசிகரை" போற்றி வணங்குவமே!

பூச்சரம் பிரிண்ட்ஸ், காரைக்குடி. Ph: 9884712091